**சார்பு நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு. C.B. வேதகிரி,** B.Pharm, MS-IT (Aus), L.L.M.
**சார்பு நீதிபதி, சீர்காழி.**
*******

2026-ம் ஆண்டு ஜூன் மாதம் 12-ம் நாள் வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.304/2024**
**CNR No.TNMY06-001638-2024**

விஜயகுமார் ....வாதி

...எதிர்...

பபிதா .....பிரதிவாதி

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என் முன்பாக 10.06.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. என். அன்பழகன் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முன்வராமல் ஒருதலைபட்சமாக்கபட்டும், வாதி தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**தீர்ப்புரை**

**1.** இவ்வழக்கானது பிரதிவாதியிடமிருந்து தாவா தொகை ரூ.2,39,800/- பின்வட்டி மற்றும் செலவுத்தொகையுடன் வசூலிப்பதற்காக வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **வாதியின் வழக்குரைச் சுருக்கம்:**

வாதியிடமிருந்து பிரதிவாதி 07.07.2021ம் தேதியன்று ரூ.2,00,000/- கடன் பெற்றுக்கொண்டுள்ளார். அதற்கு ஆதரவாக பிராமிசரி நோட்டு எழுதிக்

கொடுத்துள்ளார். மேற்படி பிராமிசரி நோட்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/–க்கு ஒரு ரூபாய் வட்டி வீதம் அசல் மற்றும் வட்டித் தொகையை வாதிக்காவது, வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்காகவது திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டு புரோ நோட்டு எழுதிக் கொடுத்துள்ளார். மேற்படி தொகைக்கு யதொரு வட்டியும் செலுத்தாமல் வாதி பலமுறை கேட்டும் கொடுக்காமல் வீண் காலம் கடத்தி வந்துள்ளார். அதனால் வாதி அசல் மற்றும் வட்டித் தொகையை கொடுக்க கோரி வழக்கறிஞர் மூலம் 01.10.2022 அன்று அறிவிப்பு கொடுத்துள்ளார். பிரதிவாதி அதனை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை. அதன் பிறகு பிரதிவாதி 15.10.2022 அன்று ரூ.1000/– மட்டும் வாதிக்கு கொடுத்து அந்த தொகை பிராமிசரி நோட்டில் வரவு வைக்கப்பட்டுள்ளது. மேலும் மீதி தொகையை திரும்ப கொடுக்கவில்லை. எனவே தாவா தொகை திரும்ப பெற்று தருமாறு கேட்டு வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கவேண்டிய பிரச்சனை யாதெனில்:</u>**

இவ்வழக்கில் கோரியுள்ள பரிகாரம் வாதிக்கு கிடைக்கக்கூடியதா? என்பதேயாகும்.

**4.** இவ்வழக்கை நிரூபிக்க வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.3 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முன்வராமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்.

**<u>5. தீர்வு:</u>**

தாவா தொகையை பிரதிவாதி செலுத்தக்கோரி வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. வாதி தரப்பு வழக்கானது வாதியிடமிருந்து பிரதிவாதி 07.07.2021ம்

தேதியன்று ரூ.2,00,000/- கடன் பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக பிராமிசரி நோட்டு எழுதிக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி பிராமிசரி நோட்டில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/-க்கு ஒரு ரூபாய் வட்டி வீதம் அசல் மற்றும் வட்டித் தொகையை வாதிக்காவது, வாதியின் உத்தரவு பெற்றவர்களுக்காவது திரும்ப தருவதாக ஒப்புக்கொண்டு புரோநோட்டு எழுதிக் கொடுத்துள்ளதாகவும், மேற்படி தொகைக்கு யதொரு வட்டியும் செலுத்தாமல் வாதி பலமுறை கேட்டும் கொடுக்காமல் வீண் காலம் கடத்தி வந்துள்ளதாகவும், வாதி அசல் மற்றும் வட்டித் தொகையை கொடுக்கக் கோரி வழக்கறிஞர் மூலம் 01.10.2022 அன்று அறிவிப்பு கொடுத்து, பிரதிவாதி அதனை பெற்றுக்கொண்டு பதில் அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்றும், அதன் பிறகு பிரதிவாதி 15.10.2022 அன்று ரூ.1,000/- மட்டும் வாதிக்கு கொடுத்து அந்த தொகை பிராமிசரி நோட்டில் வரவு வைக்கப்பட்டுள்ளதாகவும், மீதி தொகையை திரும்ப கொடுக்கவில்லை என்பதால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. வழக்குரை சங்கதிகளை நிரூபிக்க வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வாதி தரப்பு சான்றாவணங்களை பரிசீலனை செய்கையில் 07.07.2021 தேதியில் ரூ.2,00,000/- வாதியிடம் கடனாக பெற்றுக் கொண்டு பிரதிவாதி சாட்சிகள் முன்னிலையில் வாதிக்கு எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு அசல் வா.சா.ஆ.1 ஆகவும், பிராமிசரி நோட்டின் அசல் மற்றும் வட்டி தொகையை திரும்ப கேட்டு 01.10.2022 ம் தேதியில் வாதி, பிரதிவாதிக்கு கொடுத்த வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் பிரதிவாதியின் அஞ்சல் ஒப்புகை அட்டை முறையே வா.சா.ஆ.2 மற்றும் வா.சா.ஆ.3 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 புரோ நோட்டின் பரிசீலனையில் வாதியிடமிருந்து, பிரதிவாதி தாவா தொகை ரூ.2,00,000/- கடன் பெற்று அதற்கான அசல் வட்டி சேர்த்து திரும்ப செலுத்துவதாக கூறி பிராமிசரி

நோட்டு சாட்சிகள் முன்னிலையில் எழுதிக் கொடுத்துள்ளார் என்பதும், பிராமிசரி நோட்டின் படி 15.10.2022 ம் தேதியில் அசல், வட்டி வகையின் ஒரு பாகமாக ரூ.1,000/– செலுத்தி பிராமிசரி நோட்டில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும் தெரியவருகிறது. மேலும் தாவா தொகையில் மீதி தொகையான ரூ.2,39,800/– பிரதிவாதி செலுத்தவில்லை என்பதால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் பிரதிவாதி நீதிமன்ற அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வழக்கறிஞர் மூலம் ஆஜரானபோதும் வழக்கின் சங்கதிகளை மறுத்துரைத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முன்வராமல் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார். மேற்கண்ட பரிசீலனையிலிருந்து வாதி இவ்வழக்கை தகுந்த வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியம் மூலம் நிரூபித்துள்ளார் என்று தீர்மானித்து இவ்வழக்கின் பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. **முடிவாக** இவ்வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்பட்டு, வாதிக்கு பிரதிவாதி தாவா தொகையான ரூ.2,39,800/– மற்றும் அசல் தொகையான ரூ.2,00,000/– த்திற்கு வழக்குரை தேதியிலிருந்து தொகை முழுவதும் வசூலாகும் நாள் வரை 6% பின் வட்டியுடன் கொடுக்க வேண்டுமென்று தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு, பிழை திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஜூன் மாதம் 12 ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

(ஒம்/–...C.B. வேதகிரி)
சார்பு நீதிபதி,
சீர்காழி.

**<u>பின் இணைப்பு</u>**

**<u>வாதி தரப்பு சாட்சி</u>**

வா.சா.1 திருமதி. விஜயகுமார் ( வாதி)

**<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

வா.சா.ஆ.1 07.07.2021 கடன் உறுதி சீட்டு அசல்

வா.சா.ஆ.2 01.10.2022 வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல்

வா.சா.ஆ.3 -- அஞ்சல் ஒப்புகை அட்டை அசல்

**பிரதிவாதி தரப்பு சாட்சிகள் – இல்லை**

**பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள் – இல்லை**

(ஒம்/–...C.B. வேதகிரி)
**சார்பு நீதிபதி,**
**சீர்காழி.**

நேரிய / வரைவு தீர்ப்புரை
அசல் வழக்கு எண். 304/2024
நாள் – 12.06.2026